இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

(இந்தியாவில் நிறுவப்பட்டது)

தலைமையகம்: 763 அண்ணா சாலை, சென்னை 600 002

31 மார்ச் 2026 நிலவிய தனித்த இருப்புநிலைக் குறிப்பு

(₹ 000களுக்கில்)

	அட்டவணை	31.03.26ல்	31.03.25ல்
மூலதனமும் பொறுப்புகளும்			
மூலதனம்	01	19256 58 98	19256 58 98
ஒதுக்கீடுகளும் மிகுதிகளும்	02	18258 74 23	13284 32 95
வைப்புத் தொகை	03	368191 25 42	311204 17 55
பெறப்பட்ட கடன்கள்	04	51602 57 20	42227 66 32
இதர பொறுப்புகளும் மற்றும் ஒதுக்குகளும்	05	16010 69 90	9044 20 83
மொத்தம்		**473319 85 73**	**395016 96 63**
சொத்துகள்			
இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ள இருப்பும் மற்றும் ரொக்கமும் வங்கிகளில் உள்ள இருப்பும். கேட்டவுடன் அல்லது குறுகிய காலத்தில் திரும்பப் பெறும் பணமும்	06	16605 92 89	18115 54 82
முதலீடுகள்	07	8616 64 50	2954 71 60
கடன் தொகைகள்	08	119809 53 33	111044 83 64
நிலையான சொத்துகள்	09	306621 81 47	245555 16 84
இதர சொத்துக்கள்	10	5074 54 35	4654 82 10
	11	16591 39 19	12691 87 63
மொத்தம்		**473319 85 73**	**395016 96 63**
சார்புநிலைப் பொறுப்புகள்	12	153282 73 84	159405 16 51
வசூலிக்க வேண்டிய உண்டியல்கள்		18383 96 22	17088 33 51
குறிப்பிடத்தக்க கணக்கு கொள்கைகள்	17		
கணக்குகள் பற்றிய குறிப்புகள்	18		

	2025 – 26	2024 – 25
அடுக்கு 1 விகிதம் (இடர் மதிப்பிடப்பட்ட சொத்துகளில் அடுக்கு 1 மூலதனத்தின் விழுக்காடு	16.94%	16.44%
இடர் மதிப்பிடப்பட்ட சொத்துகளில் மூலதனத்தின் விகிதம் (CRAR) (இடர் மதிப்பிடப்பட்ட சொத்துகளில் மொத்த மூலதனத்தின் விழுக்காடு)	19.78%	19.04%

2026 மார்ச் 31ல் முடிவடைந்த ஆண்டுக்கான தனித்த இலாப நட்டக் கணக்கு

(₹ 000களுக்கில்)

	அட்டவணை	31.03.26ல் முடிவுற்ற ஆண்டு	31.03.25ல் முடிவுற்ற ஆண்டு
வருமானம்			
வட்டி வருமானம்	13	31895 67 85	28131 00 87
இதர வருமானம்	14	5636 47 04	5545 06 84
மொத்தம்		**37532 14 89**	**33676 07 71**
செலவு			
வட்டிச் செலவு	15	19322 04 24	17240 80 29
நடைமுறைச் செலவுகள்	16	8183 97 89	7747 26 38
ஒதுக்குகளும் சார்புநிலைகளும்		4818 09 40	5353 30 54
மொத்தம்		**32324 11 53**	**30341 37 21**
லாபம் / நட்டம் (-)			
ஆண்டுக்குரிய நிகர லாபம் / நட்டம் (-)		5208 03 36	3334 70 50
முன்கொண்டுவரப்பட்ட லாபம் / நட்டம் (-)		(12533 32 52)	(14469 29 17)
மொத்தம்		**(7325 29 16)**	**(11134 58 67)**
பகிர்வுகள்			
சட்டப்பூர்வ காப்புநிதிக்கு மாற்றியது		1302 00 84	833 67 63
மற்ற காப்புநிதிக்கு மாற்றியது		38 61 55	421 37 16
மூலதன காப்புநிதிக்கு மாற்றியது		67 42 68	43 69 06
முதலீட்டு ஏற்ற இறக்க காப்புநிதிக்கு மாற்றியது		0	100 00 00
முன்மொழியப்பட்ட ஈவுத்தொகை (ஈவு வரி உட்பட)		0	0
இருப்புநிலைக் குறிப்பில் சேர்க்கப்பட்ட தொகை		(8733 34 23)	(12533 32 52)
மொத்தம்		**(7325 29 16)**	**(11134 58 67)**
பங்கு ஒன்றின் அடிப்படை மற்றும் நீர்த்த வருவாய் (₹)		2.70	1.76
பங்கு ஒன்றின் பெயரளவு மதிப்பு (₹)		10.00	10.00

தன்னிச்சையான தணிக்கையாளர்களின் அறிக்கை

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் உறுப்பினர்களுக்கு

தனித்த நிதி அறிக்கைகளின் தணிக்கை குறித்த மதிப்புரை

1. நாங்கள் **31** மார்ச் **2026** தேதியிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் (**"வங்கி"**) இருப்புநிலைக் குறிப்பு, அதே தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான லாப நட்டக் கணக்கு, ரொக்கப் புழக்க அறிக்கை, முக்கிய கணக்குக் கொள்கைகளும் இதர விளக்கக் குறிப்புகளும் உள்ளிட்ட தனித்த நிதி அறிக்கைகளின் குறிப்புகள் ஆகியன உள்ளடங்கிய தனித்த நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்திருக்கிறோம். அதே தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான பின்வரும் கிளைகளின் பலாபலன்களும் இதில் உள்ளடங்குகிறது:

(i) மத்திய அலுவலகம் மற்றும் எங்களால் தணிக்கை செய்யப்பட்ட **20** கிளைகள்;

(ii) அந்தந்த சட்டப்பூர்வ கிளை தணிக்கையாளர்கள் தணிக்கை செய்த **14** மற்ற அலுவலகங்கள் உள்ளிட்ட **1073** கிளைகள்

(iii) அந்தந்த உள்ளூர் தணிக்கையாளர்கள் தணிக்கை செய்த **04** வெளிநாட்டுக் கிளைகள்.

ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா **(RBI)** பிறப்பித்த வங்கிகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஏற்ப எங்களாலும், இதர தணிக்கையாளர்களாலும் தணிக்கை செய்யப்பட்ட கிளைகளை வங்கி தேர்ந்தெடுத்துள்ளது. இந்த இருப்புநிலைக் குறிப்பிலும், இலாப நட்ட அறிக்கையிலும், ரொக்கப் புழக்க அறிக்கையிலும் தணிக்கைக்கு உட்படாத **2377** கிளைகள் மற்றும் **56** மற்ற அலுவலகங்களின் பலாபலன்கள் அடங்கும். தணிக்கைக்கு உட்படாத இந்தக் கிளைகள் மற்றும் இதர அலுவலகங்களின் பங்கு, முன்பணத்தில் **24.27%** வைப்புத் தொகையில் **50.79%,** வட்டி வருமானத்தில் **11.89%,** வட்டிச் செலவில் **26.56%** ஆகும்.

எங்கள் கருத்துப்படியும், எங்களுக்குக் கிடைத்த தகவல் மற்றும் எங்களுக்குத் தரப்பட்ட விளக்கங்கள் ஆகியவற்றின்படியும், மேற்குறிப்பிட்ட தனித்த நிதி அறிக்கைகள் 1949 ஆம் ஆண்டு வங்கி விதிமுறை சட்டத்தின்படி ("சட்டம்") தேவையான தகவல்களை வங்கிக்குத் தேவையான முறையில் வழங்குவதோடு, இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கியல் கொள்கைகளுக்கும் உட்பட்டுள்ளன. அதோடு:

(a) இருப்புநிலைக் குறிப்பை, தேவையான எல்லா விவரங்களும் உள்ளடங்கும் முழுமையான, நியாயமான இருப்புநிலைக் குறிப்பின் குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கும்போது, **31** மார்ச் **2026** நிலவிய வங்கியின் செயல்பாட்டு நிலையை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகிறது;

(b) இலாப நட்டக் கணக்கை, அதன் குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கும்போது, உண்மையான இலாப இருப்புத் தொகையைக் காட்டுகிறது; மற்றும்

(c) ரொக்கப் புழக்க அறிக்கை அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய ரொக்கப் புழக்கத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகிறது.

கருத்துக்கான அடிப்படை

2. நாங்கள் இந்திய சட்டப்பூர்வ முதன்மை கணக்காய்வாளர்கள் கழகம் **(ICAI)** வெளியிட்ட தணிக்கை தரங்களுக்கு **(Sas)** ஏற்ப எங்கள் தணிக்கையை நடத்தினோம். இந்தத் தரங்களின்கீழ் எங்களுக்குள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் தனித்த நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளரின் பொறுப்புகள் பகுதியில் மேற்கொண்டு விளக்கப்பட்டுள்ளன. நாங்கள் இந்திய சட்டப்பூர்வ முதன்மை கணக்காய்வாளர்கள் கழகம் வெளியிட்ட நெறிமுறைக் குறிபீட்டுக்கும், தனித்த நிதி அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்வதற்குத் தேவையான சட்டத்தின் நெறிமுறை நிபந்தனைகளுக்கும், பொருந்தத்தக்க கணக்கியல் தரங்கள் உட்பட, இந்தியாவில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளின்படியும், **நிறுவனங்கள் விதிகள் 2021 இன் கீழ் அறிவிக்கப்பட்ட கணக்கியல் தரநிலைகள்** ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவால் வெளியிடப்பட்ட வங்கிகளுக்கான கட்டுப்பாடு விதி **1949,** பிரிவு **29**-ன் படியும், வங்கியுடன் தொடர்பில்லாத சுதந்திர அமைப்பாகச் செயல்பட்டு, இந்த நிபந்தனைகள் மற்றும் நெறிமுறைக் குறிபீட்டின்படி எங்களது மற்ற நெறிமுறைப் பொறுப்புகளை நிறைவேற்றினோம். நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் பொருத்தமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம் .

வலியுறுத்தப்படும் விவகாரம்

3. தனி நிதிநிலை அறிக்கைகளின் அட்டவணை 1B-ல் உள்ள குறிப்பு எண் 9 (AS-22)-க்கு எங்களது கவனத்தை ஈர்க்கிறோம். இதில், ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து (Deferred Tax Asset) தொடர்பாக ₹2,780.97 கோடி தொகை முன்னெடுத்துச் செல்லப்பட்ட இருப்பாகவும், நடப்பு ஆண்டில் மதிப்பீட்டு அடிப்படையில் ₹1,050.14 கோடி தொகை திரும்பப் பெறப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 31 மார்ச் 2026 நிலவரப்படி முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தின் தொகையை மீட்டெடுக்க முடியும் என்ற சாத்தியக்கூறு குறித்து நிர்வாகம் மேற்கொண்டுள்ள மதிப்பீட்டையும் நாங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

இந்த விவகாரங்களின் தொடர்பிலான எங்கள் கருத்தில் எந்தத் திருத்தமும் இல்லை.

முக்கிய தணிக்கை விவகாரங்கள்

4. முக்கிய தணிக்கை விவகாரங்கள் என்பது, எங்களது நிபுணத்துவ மதிப்பீட்டின்படி, நடப்பு காலகட்டத்தில் தனித்த நிதி அறிக்கைகள் குறித்த எங்கள் தணிக்கைக்கு மிகவும் முக்கியத்துவமிக்க விவகாரங்களாகும். தனித்த நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த தணிக்கையின் அடிப்படையில் இவ்விவகாரங்கள் ஆராயப்பட்டு, அதற்கேற்ப எங்கள் கருத்தை வகுக்கையில், இவ்விவகாரங்கள் குறித்து தனியொரு கருத்தை நாங்கள் வெளியிடவில்லை பின்வரும் விவகாரங்கள் எங்கள் அறிக்கையில் தெரியப்படுத்தபடவேண்டிய வங்கியின் முக்கிய தணிக்கை விவகாரங்கள் என நாங்கள் நிர்ணயித்திருக்கிறோம்:

I. முன்பணங்கள்/கடன்களின் வகைப்படுத்தல், வருமானத்தை அங்கீகரித்தல், செயல்படாத கடன்களை (NPA) அடையாளம் காணுதல் மற்றும் அவற்றிற்கான ஒதுக்கீடு (Provisioning) செய்தல். நிதிநிலை அறிக்கைகளின் அட்டவணை 17-ன் பத்தி 5-ஐ பார்க்கவும்.

வங்கியின் நிகர முன்பணங்கள், நிதி அறிக்கைகளின் குறிப்பிடத்தக்க பகுதியான மொத்த சொத்துகளில் **64.78** விழுக்காடாகும். அவை, பிறவற்றிற்கிடையில், வருமான அங்கீகரிப்பு, சொத்து பகுப்பு மற்றும் ஒதுக்கீடு **(IRACP)** நடைமுறைகளாலும், உள்ளூர் விதிமறைகள் அல்லது இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டிகள் ஆகிய இரண்டில் அதிக கண்டிப்பானதன்படி முன்பணங்களும் ஒதுக்கீடுகளும் பகுக்கப்படும் வெளிநாட்டு அலுவலகங்கள் தவிர, முன்பணங்களை செயல்படும் மற்றும் செயல்படாத முன்பணங்களாக **(NPA)** பகுப்பதன் தொடர்பில் இந்திய ரிசர்வ் வங்கி இடையிடையே வெளியிடும் இதர சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகளாலும் நிர்வகிக்கப்படுகின்றன வங்கி பின்பற்றும் கணக்கியல் கொள்கையின்படி, இந்த முன்பணங்கள் **IRACP** நடைமுறைகளின் அடிப்படையில் பகுக்கப்படுகின்றன.

செயல்படும் மற்றும் செயல்படாத முன்பணங்களை அடையாளம் காண முறையான இயங்குமுறை நிலைநாட்டப்பட்டிருக்கவேண்டும். முன்பணங்கள் தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகளையும் **Core Banking Solution (CBS)** எனும் தனது தகவல் தொழில்நுட்ப செயலியக்கத்தில் **(IT System)** வங்கி பதிவு செய்கிறது. முன்பணங்கள் செயல்படுகிறதா செயல்படவில்லையா என்பதையும் இந்தச் செயலியக்கம் அடையாளம் காட்டுகிறது.

வருமான அங்கீகரிப்பு, சொத்து பகுப்பு, முன்பணங்கள் தொடர்பான ஒதுக்கீட்டுக்கு இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட விவேகமான நடைமுறைகளைப் பின்பற்றுவதோடு, செயல்படாத சொத்துகளுக்கு ஒதுக்கீடு செய்ய குறிப்பிட்ட சில கொள்கைகளையும் வங்கி கடைப்பிடிக்கிறது.

IRACP நடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்படாவிட்டால், இந்த முன்பணங்களின் ஏட்டு மதிப்பு (ஒதுக்குகளின் நிகரம்), தனித்தனியாக அல்லது மொத்தமாக, தவறாகக் குறிப்பிடப்படலாம்.

பரிவர்த்தனைகளின் இயல்பு, சட்டவிதிகள், தற்போதைய தொழில் சூழல், பங்குப் பத்திரங்களின் மதிப்பீட்டிலும் ஒதுக்குகளின் கணக்கீட்டிலும் சம்பந்தப்பட்டுள்ள கணிப்பு/மதிப்பீடு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, தனித்த நிதி அறிக்கைகளின் பயன்பாட்டாளர்களுக்கு இது அதிக முக்கியமான விவகாரமாகும்.

மேலும், கடன் பெறுவோர் சமர்ப்பிக்கும் தரவுகள் மீதான சார்புநிலையாலும், வங்கி செய்யும் பணமெடுப்புச் சக்தி கணக்கீடுகள், இடர்காப்பு மதிப்பீட்டில் மூன்றாம் தரப்பு, இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட பல்வேறு வழிகாட்டிகளின்படி ஒதுக்குகள் கணக்கீடு, மறுசீரமைக்கப்பட்ட முன்பணங்களின் மதிப்புக் குறைவு கணக்கீடு செயல்படாத முன்பணங்களில் உள்ளடங்கியவை உள்ளிட்ட வட்டி வருமான அங்கீகரிப்பு ஆகியவற்றுக்கு இது இட்டுச்செல்வதாலும், மேற்காணும் விவகாரத்தை முக்கிய தணிக்கை விவகாரமென நாங்கள் முடிவு செய்தோம்.

தணிக்கையாளர்களின் **நடவடிக்கைகள்**
முதன்மையான தணிக்கை **நடைமுறைகள்**

நாங்கள் செயல்படாத சொத்துகளை அடையாளம் காணவும் அதற்கு ஒதுக்கீடுகள் செய்யவும் வங்கி நடைமுறைப்படுத்தியுள்ள செயலியக்கத்தை பரிசீலனை செய்தோம். எங்கள் தணிக்கையில், உள் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் நடைமுறைச் செயலாற்றலையும் சோதிப்பதும் குறிப்பிடத்தக்க சோதனைகளை மேற்கொள்வதும் உள்ளடங்கின. பின்வருபவை அதில் உள்ளடங்கும்:

a) நாங்கள் செயலியக்கத்தின் உள் கட்டுப்பாடுகள், இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டிகளின்படி உள்ளடக்கப்பட்ட சரிபார்ப்புகள் மற்றும் சமநிலைகள், செயல்படாத சொத்துகளை அடையாளம் காண்பதற்கான வங்கியின் கொள்கைகள், குறிப்பிடத்தக்க நடைமுறைகளின் இயல்பு, காலவரையறை, அளவு ஆகியவற்றின் நிர்ணயிப்பு ஆகிய விவரங்களை வங்கியிடமிருந்து தெரிந்துகொண்டு, அதற்கேற்ப எங்களது தணிக்கை முறையைத் திட்டமிட்டோம்.

b) எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட உச்ச **20** கிளைகளைப் பொறுத்தவரை, வருமான அங்கீகரிப்பு, செயல்படும் மற்றும் செயல்படாத முன்பணங்களாகப் பகுத்தல், **IRACP** நடைமுறைகளின்படி ஒதுக்கீடு செய்தல் ஆகியவற்றுக்காகச் செயலியக்கத்தில் உள்ளிடப்பட்ட தரவின் துல்லியம். எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கிளைகளில் குறிப்பிடத்தக்க நடைமுறைகளை மேற்கொள்கையில், பெருந்தொகை முன்பணங்களை / அமுத்தமுள்ள முன்பணங்களை நாங்கள் ஆராய்ந்தோம். மற்ற முன்பணங்கள் மாதிரி அடிப்படையில் ஆராயப்பட்டன. வங்கியின் நிர்வாகம் வழங்கிய சுயேச்சை மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டு அறிக்கைகளின் மறுஆய்வும் இதில் உள்ளடங்கும்.

c) வங்கியின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின்படி, உள் தணிக்கை, செயலியக்கத் தணிக்கை, கடன்பற்றுத் தணிக்கை, உடன்நிகழும் தணிக்கை போன்ற கண்காணிப்பு இயங்குமுறைகள் நடப்பில் இருப்பது மற்றும் அவற்றின் செயலாற்றல்.

d) தணிக்கைக்கு உட்படாத கிளைகளிடமிருந்து பெறப்பட்ட பலாபலன்கள் மீதான சார்புநிலை. இதைப் பொறுத்தவரை, எங்களிடம் கொடுக்கப்பட்ட மாதிரித் தரவுகள் சரியாக இருப்பதை உறுதிப்படுத்த வங்கியின் உள் கண்காணிப்பு இயங்குமுறைகளை / செயலியக்கங்களை மறுஆய்வு செய்து, எங்கள் தணிக்கையின்போது கவனிக்கப்பட்ட விதிவிலக்குகள்/ பிறழ்வுகள்/ பிழைகள் வங்கியால் போதுமான அளவு கருத்தில் கொள்ளப்பட்டதையும் உறுதி செய்தோம்.

e) செயல்படாத சொத்துகள் மற்றும் அதற்குரிய வருமான நிலைமாற்றம் ஆகியவற்றை அடையாளம் காணவும் ஒதுக்கீடு செய்யவும், இந்திய ரிசர்வ் வங்கி இடையிடையே வெளியிட்ட வழிகாட்டிகளின்படி, சோதித்துப் பார்த்தோம்.

f) செயல்படாத சொத்துகளை அடையாளம் காண்பதற்காக நிர்வாகம் செய்த கணிப்புகள் மற்றும் மதிப்பீடுகளையும், இந்திய ரிசர்வ் வங்கியின் விவேகமான நடைமுறைகளின்படி போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் பரிசீலித்து சோதித்துப் பார்த்தோம்.

g) இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டிகளின்படி வங்கி அமல்படுத்திய தானியக்கத் தகவல் தொழில்நுட்ப சொத்து பகுப்பு செயலியக்கத்தின் செயலாற்றலைப் பரிசீலித்தோம்.

h) வங்கி தேர்ந்தெடுத்த மற்ற உள்நாட்டு, வெளிநாட்டுக் கிளைகளுக்கு கிளை தணிக்கையாளர்கள் செய்த தணிக்கைப் பணியையும் நாங்கள் சார்ந்திருந்தோம்.

i) மாதிரி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன்பட்டோரின் கோப்புகளையும் அந்தக் கணக்குகளின் செயற்பாடுகளையும் மறுஆய்வு செய்தோம்.

j) எங்கள் தணிக்கையின்போது கவனிக்கப்பட்ட விதிவிலக்குகள் முறையாகச் சரிசெய்யப்படுவதை உறுதி செய்தோம்.

II. தகவல் **தொழில்நுட்பம் மற்றும் நிதித்** தகவலளிப்பைப் **பாதிக்கும் கட்டுப்பாடுகள்**

வங்கியின் நிதிக் கணக்காய்வும் தகவலளிப்பு செயல்முறையும், **Core Banking Solution (CBS)** மற்றும் **CBS** -உடன் இணைக்கப்பட்ட மற்ற தகவல் தொழில்நுட்பச் செயல்முறைகளின் செயலாற்றலைப் பெரிதும் சார்ந்துள்ளன அல்லது சுயேச்சையாக இயங்குகின்றன. செயல்முறையில் உள்ளிடப்படும் தர்க்கவியல், தரவுகளின் பரிசுத்தம் மற்றும் நம்பகத்தன்மை, பயன்பாட்டுரிமை நிர்வாகம், பொறுப்புகளின் பகிர்வாக்கம் ஆகியவற்றில் நாங்கள் கவனம் செலுத்தினோம். இந்த அடிப்படைக் கோட்பாடுகள் முக்கியமானவை. ஏனெனில், பயன்முறைகளிலும் தரவுகளிலும் செய்யப்படும் மாற்றங்கள் பொருத்தமாக இருப்பதையும், அதிகாரம் பெற்றிருப்பதையும், பரிசுத்தமாக்கப்பட்டு கண்காணிக்கப்படுவதையும் அவை உறுதிப்படுத்துகின்றன. இதன்வழி, நிதி அறிக்கைகளைத் தயாரித்துப் படைப்பதற்குப் பயன்படுத்தப்படும் துல்லியமான, நம்பகமான அறிக்கைகள்/ பலாபலன்கள், இதர நிதி மற்றும் நிதிசாரா தகவல்கள் ஆகியவற்றைச் செயல்முறை தயாரித்துத் தருகிறது.

தொழில்நுட்பச் செயல்முறைகள் நிதித் தகவலளிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வங்கியின் செயற்பாடுகளும் நிதி நடைமுறைகளும் தினந்தோறும் அதிகளவுகளில் தகவல்களைத் தயாரித்து, தகவல் தொழில்நுட்பச் செயல்முறைகளைப் பெரிதும் சார்ந்திருக்கும் பலதரப்பட்ட, சிக்கலான பரிவர்த்தனைகளைச் செயலாக்குகின்றன. தானியக்கக் கணக்காய்வு நடைமுறைகளும் அதற்குரிய உள் கட்டுப்பாடுகளும் துல்லியமாக வடிவமைக்கப்படாமலும் செயலாற்றலுடன் செயல்படாமலும் போகலாம் என்பதால், இது முக்கிய தணிக்கை விவகாரமாகக் கருதப்படுகிறது.

தணிக்கையாளர்களின் **நடவடிக்கைகள்**
முதன்மையான தணிக்கை **நடைமுறைகள்**

எங்கள் தணிக்கையில், முக்கியத் தகவல் தொழில்நுட்பப் பயன்முறைகளைப் பரிசீலனை செய்து அடையாளம் காண்பதும், சரிபார்ப்புக்கான சோதனையின் அடிப்படையில் செயலியக்கம் தயாரித்தளித்த அறிக்கைகள்/ பலாபலன்கள் மற்றும் இதர நிதி மற்றும் நிதிசாரா தகவல்கள் ஆகியவற்றைக் கொண்டு தகவல் தொழில்நுட்பச் செயலியக்கத்தின் வடிவமைப்பும் செயலாற்றலையும் மேற்கொண்டு சரிபார்த்தல், சோதித்தல், மறுஆய்வு செய்தல் ஆகியனவும் உள்ளடங்கும். எங்கள் தணிக்கையில் பின்வருபவை உள்ளடங்கும்:

a) தணிக்கைக்குத் தேவையானதாக இருக்கக்கூடிய வங்கியின் தணிக்கைக் காலகட்டத்து தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டுச் சூழலையும் முக்கிய மாற்றங்களையும் தெரிந்து கொண்டோம்.

b) நிதித் தகவலளிப்புக்கு அவசியமான பயன்முறை, பயன்பாட்டுரிமை கட்டுப்பாடுகள் ஆகியன உட்பட, வங்கியின் தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, அமலாக்கம், செயலாற்றல் ஆகியவற்றைச் சரிபார்க்க சோதனை முறையில் மறுஆய்வு செய்தோம்.

c) கூடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என நாங்கள் அடையாளம் கண்டவற்றில், தானியக்கமற்ற மாற்றுக் கட்டுப்பாட்டு முறைகளை நாங்கள் சார்ந்திருந்தோம்; செயலியக்கங்களுக்கும் மற்ற தகவல் மூலங்களுக்கும் இடையில் சமரசம் காணுதல் அல்லது கூடுதல் சோதனைகள் செய்தல்; போதிய அளவுக்குப் பொருத்தமான தணிக்கை ஆதாரங்களைப் பெற மாதிரிகளின் அளவுகளை விரிவுபடுத்துதல் போன்றவை இதில் உள்ளடங்கும்.

d) சட்டப்பூர்வக் கிளை தணிக்கையாளர்கள் செய்த தணிக்கை பணியையும், கிளை தணிக்கைகளின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட பதிவுத் திருத்தங்களையும் சார்ந்திருந்தோம்.

e) வெளிதரப்பு கண்காணிப்பு அறிக்கைகள் கிடைக்கும்போது சார்ந்திருந்தோம்.

f) IS தணிக்கை அறிக்கைகளை மறுஆய்வு செய்து, முக்கியத் தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகளுடனான உடன்பாட்டு நிலை குறித்து தகவல் தொழில்நுட்பப் பிரிவுடன் கலந்து பேசினோம்.

III. முதலீடுகளின் பகுப்பு மற்றும் மதிப்பீடு, செயல்படாத **முதலீடுகளை** அடையாளம் **காணுதல் மற்றும் ஒதுக்கீடு** செய்தல் **(நிதி அறிக்கைகளின்** அட்டவணை **18**ன் **குறிப்பு 3**-உடன் **வாசிக்கப்படும்** அட்டவணை **17**ன் **பகுதி 4 பார்க்கவும்).**

முதலீடுகளில் பல்வேறு அரசாங்கப் பங்குப்பத்திரங்கள், முறிகள், கடன்பத்திரங்கள், பங்குகள், பங்குப்பத்திர ரசீதுகள், அங்கீகரிக்கப்பட்ட இதர பங்குப்பத்திரங்கள் ஆகியவற்றில் வங்கி செய்துள்ள முதலீடுகள் உள்ளடங்கும்.

முதலீடுகள் வங்கியின் மொத்த சொத்துகளில் **25.31** விழுக்காடாகும். இந்திய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகளின்கீழ் இவை நிர்வகிக்கப்படுகின்றன. இந்திய ரிசர்வ் வங்கியின் இந்த வழிகாட்டிகள், பிறவற்றிற்கிடையில், முதலீடுகளின் மதிப்பீடு, முதலீடுகளின் பகுப்பு, செயல்படாத முதலீடுகளை அடையாளம் காணுதல், அதற்குரிய வருமானம் அங்கீகரிக்கப்படாமை, அதற்காக ஒதுக்கீடு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

சந்தையில் பட்டியலிடப்படாத முதலீடுகள் மற்றும் குறைவாகப் பரிவர்த்தனையாகும் முதலீடுகள் ஆகியவற்றின் மதிப்பீடு, சந்தையின் நிலையற்றத்தன்மை, நம்பகமான விலைகள் இல்லாமை, பரந்த பொருளியல் நிச்சயமின்மை ஆகியவற்றின் காரணமாக உள்ளார்ந்த இடராக நிலவுகிறது.

இதனால், முதலீடுகளின் மதிப்பீடு, பகுப்பு, செயல்படாத முதலீடுகளை அடையாளம் காணுதல், முதலீடுகளின் தொடர்பில் ஒதுக்கீடு செய்தல் ஆகியவற்றில் எங்கள் தணிக்கை கவனம் செலுத்தியது.

மேற்குறிப்பிடப்பட்ட பங்குப்பத்திரங்களின் ஒவ்வொரு பிரிவின் (வகையின்) மதிப்பீடும், இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட சுற்றறிக்கைகளிலும் வழிகாட்டிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள செய்முறையின்படி செய்யப்படவேண்டும். **FIBIL** விதிகங்கள், **BSE.NSE** வெளியிட்ட விதிகங்கள், பட்டியலிடப்படாத நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் போன்ற பல்வேற மூலங்களிலிருந்து தரவு/தகவல் சேகரிப்பது இதில் உள்ளடங்கும்.

மதிப்பீட்டிலுள்ள சிக்கல்கள் மற்றும் மதிப்பீட்டு வரையறை, பரிவர்த்தனைகளின் அளவு, கைவசமுள்ள முதலீடுகள், சட்டவிதி கவனிப்பின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மேற்காணும் விவகாரத்தை முக்கிய தணிக்கை விவகாரமாக நாங்கள் நிர்ணயித்தோம்.

தணிக்கையாளர்களின் **நடவடிக்கைகள்**
முதன்மையான தணிக்கை **நடைமுறைகள்**

இந்திய ரிசர்வ் வங்கி சுற்றறிக்கைகள்/ வழிகாட்டிகளின்படி, முதலீடுகள் குறித்து நாங்கள் மேற்கொண்ட தணிக்கை அணுகுமுறையில், உள் கட்டுப்பாடுகளைப் புரிந்து கொள்ளுதலும், மதிப்பீடு, பகுப்புமுறை, செயல்படாத முதலீடுகளை அடையாளம் காணுதல், முதலீடுகள் தொடர்பான ஒதுக்கீடு/ தேய்மானம் ஆகியவற்றின் தொடர்பில் குறிப்பிடத்தக்க தணிக்கை நடைமுறைகளை மேற்கொள்வதும் உள்ளடங்கின.

கருவூலத் தணிக்கை குறித்து நாங்கள் மேற்கொண்ட தணிக்கை நடவடிக்கைகள், பின்வருபவற்றில் கவனம் செலுத்தின –

a) நாங்கள் வங்கியின் உள் கட்டுப்பாட்டு முறையை ஆராய்ந்து, மதிப்பீடு பகுப்புமுறை, செயல்படாத முதலீடுகளை அடையாளம் காணுதல், முதலீடுகள் தொடர்பான ஒதுக்கீடு/ தேய்மானம் ஆகியவற்றுக்குரிய இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டிகளுக்கு அது உடன்படுகிறதா என்பதைப் புரிந்து கொண்டோம்.

b) கைவசமிருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீட்டு மாதிரிகளுக்கு, அவற்றின் துல்லியத்தையும் அவை இந்திய ரிசர்வ் வங்கியின் பிரதான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகளுக்கு உடன்படுகிறதா என்பதையும் சோதித்திப் பார்த்தோம். இதற்காக, இடர்காப்பின் ஒவ்வொரு பிரிவுக்கும் மீண்டும் மதிப்பீடுகள் செய்தோம். முதலீடுகளின் எல்லாப் பிரிவுகளும் (இடர்காப்பின் இயல்பின் அடிப்படையில்) மாதிரிகளில் இடம்பெற்றிருப்பதை உறுதி செய்த பிறகு மாதிரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

c) அண்மை நிதி அறிக்கைகளின் அடிப்படையில் அல்லது இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டிகளில் உள்ள இதர நடைமுறைகளின் அடிப்படையில், சந்தையில் பட்டியலிடப்படாத முதலீடுகளின் மதிப்பீட்டை சுயேச்சையாகச் சோதித்துப் பார்த்தோம்.

d) செயல்படாத முதலீடுகளை அடையாளம் காணும் முறையையும். அதற்கேற்ப வருமான நிலைமாற்றம் செய்தல், ஒதுக்கீடுகள் உருவாக்குதல் ஆகியவற்றையும் பரிசீலித்து ஆராய்ந்தோம்.

e) இந்திய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகளுக்கு ஏற்ப நிலைநாட்டப்படவேண்டிய ஒதுக்கீடு, செய்யப்படவேண்டிய தேய்மானம் ஆகியவற்றை சுயேச்சையாக மறுகணக்கீடு செய்ய குறிப்பிடத்தக்க தணிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இதன்படி, இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டிகளுக்கிணங்க, ஒவ்வொரு மு